# வெப்பத்தை வெல்வோம்

## வெப்பத்தை வெல்வதில் வளர்ப்புப் பிராணிகளுக்கு உதவவும்

செப்டெம்பர் 2011

வளர்ப்புப் பிராணிகள் காயத்துக்கும், வெப்பத்தாக்க சுகயீனங்களுக்கும் உள்ளாகும் சாத்தியம் கோடையிலேயே மிக அதிகம். உங்கள் வளர்ப்புப் பிராணிகளைப் பத்திரமாகவும், குளுமையாகவும் வைத்திருப்பதற்கு உதவும் குறிப்புகள் சில கீழே காணப்படுகின்றன:

**உடன் நீர் அதிகம் கொடுக்கவும்.**
நாய்க்கு மூச்சு வாங்கும்பொழுதே அல்லது அதன் உள்ளங்கால் ஊடாகவே வியர்வை வெளிப்படும். அதன் ஈர வாயிலிருந்து அல்லது மூக்கிலிருந்து வீணி வெளியேறுவது, அதன் உடல்வெப்பம் தணிய உதவும். வெப்ப காலநிலையில் வளர்ப்புப் பிராணிகளுக்கு அதிக நீர் கொடுக்கவும். வீட்டில் இருக்கும்பொழுது, அன்றாடம் உலாவும்பொழுது, வெளியே செல்லும்பொழுது, எப்பொழுதும் அவற்றுக்கு உடன் நீர் கிடைக்க வகை செய்யவும்.

**வெங்குரு உண்டாகிறதா என்று பார்க்கவும்**
மிருதுவான உள்ளங்கால் எளிதில் வெந்துபோகும். ஏரிக்கரை நீர், மணல், பாறை என்பன வெயிலைப் பிரதிபலிப்பவை – அதனால் உங்கள் வளர்ப்புப் பிராணிக்கு வெங்குரு உண்டாகக் கூடும். குறுமயிர் கொண்ட பிராணிகளும், செந்தோல் அல்லது வெண்மயிர் கொண்ட பிராணிகளும் வெந்துபோகும் வாய்ப்பு அதிகம். உங்கள் வளர்ப்புப் பிராணி வெயிலின் தாக்கத்துக்கு உள்ளாவதை மட்டுப்படுத்தவும் – உள்ளாகும் நேரத்தை மட்டுப்படுத்தி, நிழல் கிடைக்கச் செய்யவும்.

**குளுமையான இடத்தை நாடவும்**
குளுமையூட்டி அல்லது மின்விசிறி கொண்டு உங்கள் வீட்டைக் குளுமைப்படுத்தவும். வீட்டுக்கு வெளியே வளர்ப்புப் பிராணிகளுக்கு நிழல் கிடைக்கச் செய்யவும். வளவுத் தோட்டத் தண்ணீர்க் குழாய் கொண்டு மிருதுவான முறையில் அவற்றுக்குத் தண்ணீர் தெளிப்பதும் அவற்றைக் குளுமைப்படுத்த உதவும். என்றுமே வளர்ப்புப் பிராணியை வெப்ப காலநிலையிலோ, மாடி முகப்புக் கூடத்திலோ, கொட்டிலற்ற பின்வளவிலோ இட்டுச் செல்லக் கூடாது.

**வளர்ப்புப் பிராணிகள் எவ்வளவு உண்கின்றன, நடமாடுகின்றன என்பதைக் கவனிக்கவும்**
வெப்ப காலநிலையில் மட்டுமீறி உண்பது உடற்சூட்டை மட்டுமீறிப் பெருக்கும். எனவே, உங்கள் வளர்ப்புப் பிராணிகள் குறைத்து உண்ணும்படி பார்க்கவும். அன்றாடம் குளுமை மிகுந்த வேளையைப் பயன்படுத்தும் வண்ணம் வெளி வேலைகளைத் திட்டமிடவும், அல்லது திட்டங்களை மாற்றியமைக்கவும்.

**என்றுமே உங்கள் வளர்ப்புப் பிராணியைக் காரில் இட்டுச் செல்லக் கூடாது**
வெளிவெப்பம் 23 பாகை செல்சியசாக இருக்கும் வேளையில் உள்ளூர்தி வெப்பம் 50 பாகை செல்சியசை விஞ்சும் கட்டத்தை எட்டும் - மிகவும் ஆபத்து விளைவிக்கும் கட்டத்தை எட்டும். அத்தகைய வெப்பம் வளர்ப்புப் பிராணிகளுக்கு மிகவும் ஆபத்து விளைவிக்கும். வெப்பத்தாக்க சுகயீனங்கள் ஏற்படும் சாத்தியத்துக்கு அது இட்டுச்செல்லும். அதனால் அவை விரைவில் இறக்கவும் கூடும். ஊர்திச் சாளரங்களைச் சற்றுத் திறந்து விடுவதாலோ, ஊர்திகளை நிழலில் நிறுத்திச் செல்வதாலோ வெப்பம் ஆபத்தான கட்டத்தை எட்டுவதைத் தடுக்க முடியாது என்பதையே ஆய்வுகள் புலப்படுத்துகின்றன. வெப்ப காலநிலையில் வளர்ப்புப் பிராணிகளை வீட்டுக்குள் வைத்திருப்பதே அவற்றுக்கு மிகுந்த கனிவும் பதுகாப்பும் அளிப்பதாகும். உங்கள் வளர்ப்புப் பிராணியை நீங்கள் வெளியே எடுத்துச்செல்ல வேண்டும் என்றால், ஒரு மாற்றுச் சாவியைக் கொண்டுசெல்லவும். தற்செயலாக உங்கள் வளர்ப்புப் பிராணி ஊர்திக்குள் வைத்துப் பூட்டப்பட்டுவிட்டால், மாற்றுச் சாவி கைகொடுக்கும்.

**வெப்ப அயர்ச்சியின் அறிகுறிகள் தென்படுகின்றனவா என்று பார்க்கவும்**
விரைந்து மூச்சு வாங்குதல், அதிக வீணி சிந்துதல், தோல் வேகுதல், தசைநார் இழுத்தல், வாந்தி எடுத்தல், வெறித்த தோற்றம் என்பன அத்தகைய அறிகுறிகளுள் அடங்கும். வெப்ப அயர்ச்சி (heat stroke) என்பது ஒரு பாரதூரமான சுகயீனம். அதற்கு உடன் சிகிச்சை அளிக்க வேண்டும். சிகிச்சை அளிக்காவிட்டால், உங்கள் பிராணி இறக்கக் கூடும். உங்கள் பிராணியை நிழல்மிகுந்த இடத்துக்கு நகர்த்தி, அதன்மீது தண்ணீர் ஊற்றி, அதனைக் குளுமைப்படுத்த விரைந்து நடவடிக்கை எடுக்கவும். உடனடியாக ஒரு விலங்கு மருத்துவருடன் தொடர்புகொள்ளவும்.

**தற்செயலாக உங்கள் வளர்ப்புப் பிராணி உங்கள் காருக்குள் வைத்துப் பூட்டப்பட்டால், அழைக்கவும்:911. மேலதிக விபரங்களுக்கு அல்லது ஒரு வளர்ப்புப் பிராணி வெப்பத்தால் தாக்குண்டிருப்பதைக் கண்டால், ரொறன்ரோ விலங்குநல சேவையகத்தை (Toronto Animal Services) அழைக்கவும்: 416-338-PAWS (7297).**

TAMIL-BEAT THE HEAT-Help Pets Beat the Heat